## ராகுல் காந்தி சார்பாகக் கூறுகிறேன் – முதல்வருடன் உறுதியாகக் கைகோர்த்திருக்கிறோம்!

# முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் ஐந்தாண்டு வெற்றிகரமான பணிகளை தமிழ்நாடு மட்டுமல்ல – இந்தியாவே பாராட்டுகிறது!

### மறைமலை நகர் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில்

## கர்நாடக துணை முதலமைச்சர் டி.கே.சிவகுமார் புகழாரம்!

**மறைமலைநகர், ஏப்.11**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஐந்தாண்டு வெற்றிகரமான பணிகளை தமிழ்நாடு மட்டுமல்ல. இந்தியாவே பாராட்டுகிறது என்று கர்நாடகா துணை முதலமைச்சர் டி.கே.சிவகுமார் அவர்கள் நேற்று முன்தினம் (09.04.2026) மறைமலைநகரில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல் பரப்புரைப் பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு, புகழாரம் சூட்டினார்.**

**கர்நாடக துணை முதலமைச்சர் டி.கே.சிவகுமார் பேசியதாவது:-**

இந்த நிகழ்ச்சியில் சிறப்புரையாற்றி மீண்டும் முதலமைச்சர் ஆக இருக்கும் முதலமைச்சர் ஸ்டாலின் அவர்களே,

டி.ஆர். பாலு அவர்களே,

கிரிஷ் சோடங்கர் அவர்களே,

மற்றும் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உங்களையெல்லாம் அறிமுகப் படுத்தியிருக்கும் முதலமைச்சர் அவர்களால் வெற்றி வேட்பாளராக களம் காண்கின்ற உங்களுக்கு வாழ்த்துகள்...

நான் மல்லிகார்ஜுன கார்கே அவர்கள் சார்பாகவும், இளந்தலைவர் ராகுல்காந்தி அவர்கள் சார்பாகவும் ஒன்றை இங்கு தெரிவிக்க விரும்புகிறேன். நாங்களெல்லாம் முதலமைச்சர் ஸ்டாலின் அவர்களுடன் உறுதியாக கை கோர்த்திருக்கிறோம்.

பொறாமையின் உச்சத்தில் பா.ஜ.க.!

நம்முடைய முதலமைச்சர் அவர்களின் பணியை, ஐந்தாண்டுகளாக வெற்றிகரமான இந்த பணியை தமிழ்நாடு மட்டுமல்ல. இந்தியாவே உற்றுப் பார்த்துக் கொண்டிருக்கிறது. அதுமட்டுமல்ல. இந்தியாவே பாராட்டுகிறது. இதைப் பார்த்து தாங்கிக்கொள்ள முடியாத பா.ஜ.க. பொறாமையின் உச்சத்தில் இருக்கிறது. ஆகையால் தமிழ்நாட்டை அழிப்பதற்கான படையெடுப்பை நடத்திக் கொண்டிருக்கிறது. இது பலிக்காது.

சில சதிகளை செய்து பார்க்கிறார்கள். முடியவில்லை. இன்னும் அந்த சதிகளை தொடரப் பார்க்கிறார்கள். முடியவில்லை. நாங்கள் உறுதியாகவும், வலிமையாகவும் இருக்கிறோம்.

ஸ்டாலின் அவர்களின் கரத்தை வலுபடுத்துவோம்.

**மீண்டும் முதல்வராக பொறுப்பேற்பார்!**

20 கட்சிகளுக்கு மேல் நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்கள் தலைமையில் அவர் தலைமையேற்று இந்த தேர்தலை சந்திக்கிறார்கள். நாங்கள் ஒரு ஆய்வு செய்தோம். ஆய்வின் முடிவில், பெருவாரியான வெற்றி பெற்று மீண்டும் முதலமைச்சராக ஆவார் என்று அந்த ஆய்வு சொல்கிறது.



நேற்று ஒரு செய்தியைப் பார்த்திருப்பீர்கள். ஒருவர் சொல்கிறார். காங்கிரஸ் என்னோடு இருக்கிறது என்று... நான் சொல்கிறேன். தலைவர் ராகுல் காந்தி அவர்களின் சார்பாகவும், தலைவர் மல்லிகார்ஜுன கார்கே அவர்களின் சார்பாகவும் காங்கிரஸ் பேரியக்கம் அண்ணன் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களுடன் மட்டும்தான் இருக்கிறது. இந்த செய்தி அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியால் வலியுறுத்தப்பட்டு அறிவிக்கப்பட்டது.

**நேற்று முளைத்த காளான்கள்!**

அரசியல் என்பது அரசியல் களம் என்பது ஒரு விவசாயம் போன்றது, வேளாண்மை போன்றது. முதலில் நிலத்தை சரிசெய்ய வேண்டும். நிலத்தை பதப்படுத்தி நாற்று நட வேண்டும். களை எடுக்க வேண்டும். அறுவடை காலத்தில் அறுவடை செய்ய வேண்டும். அதுதான் உண்மையான அரசியல். இப்படிதான் திராவிட முன்னேற்றக் கழகமும் காங்கிரசும் 40 - 50 ஆண்டுகளுக்கு மேல் பின்னிப்பிணைந்த உறவாக இருக்கிறது. ஆகவே, நேற்று முளைத்த காளான்கள் எல்லாம் இந்த உறவை பிரிப்பதற்கு முயற்சி செய்வதும், சதி செய்வதும் எந்த காலத்திலும் முடியாது. நாங்கள் சதிகளை முறியடிப்போம்.

நல்ல இளைஞர்களையும், தலைவர்களையும் இங்கு வேட்பாளர்களாக முதலமைச்சர் அவர்கள் அறிமுகப்படுத்தியிருக்கிறார். அவர்கள் வெற்றி பெற வேண்டும். அவர்கள் வெற்றி பெறுவது உங்கள் கையில் இருக்கிறது. மீண்டும் நம்முடைய அண்ணன் தளபதி அவர்கள் முதலமைச்சராக வேண்டும். இந்த இணைப்பு என்பது, உறவு என்பது தொடரும். மீண்டும் அவரை முதலமைச்சராகப் பார்ப்போம்.

மீண்டும், மீண்டும் சொல்கிறேன். உறுதியாக பெருவாரியான வித்தியாசத்தில் முதலமைச்சராக மு.க. ஸ்டாலின் அவர்கள் வருவார். காங்கிரஸ் எப்படி கர்நாடகாவில் சொன்னதை செய்தோமோ... கேரண்டி திட்டத்தை செயல்படுத்தினோமோ... அதேபோன்று தமிழ்நாட்டில் ஐந்தாண்டுகளாக வெற்றிகரமாக அவர் சொன்ன வாக்குறுதிகளை நிறைவேற்றியிருக்கிறார். காங்கிரசும், திராவிட முன்னேற்றக் கழகமும் சொன்னதை செய்வோம். செய்வதை சொல்வோம். ஆகவே, அவர் மீண்டும் வாக்குறுதி கொடுத்திருக்கிறார். அதையும் அவர் செய்து முடிப்பார் என்று உறுதியாக சொல்கிறேன்.

தமிழ்நாட்டிற்கு வேண்டிய எல்லா திட்டங்களையும் முதலமைச்சர் அவர்கள் தீட்டிக் கொடுத்திருக்கிறார். விலைவாசி உயர்வு ஒருபக்கம். விலைவாசி ஏற்றம். அதை கட்டுப்படுத்திக் கொண்டிருக்கிறார். அதனால்தான் மக்களுக்கான எல்லா நலன்களையும் அவர் தீட்டி வருகிறார். இது வெற்றி பெறும். இது வெற்றி கூட்டணி. இதை யாரும் அசைக்க முடியாது. உறுதியாக சொல்கிறேன். மீண்டும் மீண்டும் முதலமைச்சராக வருவார் அண்ணன் ஸ்டாலின் அவர்கள்.

மீண்டும் அரசு அமைப்பார். முதலமைச்சராவார் என்று உறுதியாக சொல்லி நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன்.

இவ்வாறு கர்நாடக துணை முதல்வர் டி.கே. சிவகுமார் உரையாற்றினார்.

---

## தோல்வி பயத்தால் முதல்வர் குறித்து தரம் தாழ்ந்து பேச்சு!

# திமிர், வாய்க்கொழுப்புடன் எடப்பாடி பழனிசாமி பேசியுள்ளார்!

### கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி காட்டமான பேட்டி!

**சென்னை, ஏப்.11**

**தோல்வி பயத்தால் முதல்வர் குறித்து தரம் தாழ்ந்து பேசுகிறார் பழனிசாமி என்றும், திமிர் மற்றும் வாய்க்கொழுப்புடன் எடப்பாடி பழனிசாமி பேசியுள்ளார் என்றும் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.**

**அண்ணா அறிவாலயத்தில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது:**



தமிழ்நாடு முழுவதிலும் முதல மைச்சரின் சுற்றுப்பயணத்தில் மக்கள் காட்டுகிறவரவேற்பையும், ஆதரவையும் பார்த்துத் தாங்கிக் கொள்ள முடியாமல், ஒவ்வொருநாளும் வயிற்றெரிச்சலின் காரணமாக ஒவ்வொரு விதமாக எடப்பாடி பழனிசாமி பிதற்றிக்கொண்டி ருக்கிறார்.

தேர்தல் பிரச்சாரத்தில் எப்படிப் பிரச்சாரம் செய்ய வேண்டும். ஒரு தலைவர் எப்படிப் பேச வேண்டும் என்ற இலக்கணம் இருக்கிறது. அந்த இலக்கணத்தை எல்லாம் மீறக்கூடிய வகையில் தரம் தாழ்ந்து, மிகக் கேவலமாக, மனித சமுதாயத்துக்கே புறம்பான பேச்சை எல்லாம் இன்றைக்கு பழனிசாமி பேசி வருகிறார்.

நேற்றைய தினம் அவருடைய வயிற்றெரிச்சலின் உச்சக்கட்டமாக எங்களுடைய உயிரினும் மேலான அன்புத் தலைவர், இரண்டு கோடி தொண்டர்களுடைய மிகப் பெரிய உயிராகமதிக்கப்படுகிற எங்கள் ஒப்பற்ற தலைவர் முதலமைச்சரை மிகவும் கீழ்த்தரமாகப் பேசியிருக்கிறார்.

**பழனிசாமி காலத்தில் பிணக் குவியல்கள்!**

கொரோனா நேரத்தில் இந்த நாடு எப்படி இருந்தது என்பது எல்லோருக்கும் தெரியும். இவருடைய ஆட்சிக் காலத்தில் மக்கள் பரிதவித்தார்கள். ஆக்சிஜன் கிடைக்காமல் எல்லாவிதமானஆபத்துக்கும் ஆளாகி, நித்தம் நித்தம் இவருடைய ஆட்சிக் காலத்திலே பிணக் குவியல்கள் இருந்தன.

தமிழ்நாட்டில் தி.மு.க. ஆட்சி ஏற்பட்டு, கழகத் தலைவர் தமிழ்நாட்டின் முதலமைச்சராக வந்தபிறகுதான் கொரோனாவைக் கட்டுப்படுத்தினார் என்பது உங்களுக்கெல்லாம் மிக நன்றாகத் தெரியும்.

கொரோனா நேரத்தில் பழனிசாமியைப் போன்றவர்கள் வெளியே வருவதற்கே பயந்த நேரத்தில்.முதலமைச்சர் பொறுப்பு ஏற்றுக்கொண்ட எங்கள் தலைவர் கோயம்புத்தூர் மருத்துவமனைக்குச் சென்றார்.

மருத்துவர்களும் மற்றவர்களும் தடுத்த போதும்கூட மருத்துவமனைக்குள் சென்று கொரோனா நோயாளிகளை நேரில் பார்த்து, அவர்களுக்குச் சிகிச்சை அளிப்பதைப் பார்த்ததனுடைய விளைவுதான் தமிழ்நாட்டில் கொரோனா அச்சம் குறைந்து மக்கள் நிம்மதியாக வாழத் தொடங்கினார்கள் என்பது வரலாறு.

இதை மூடி மறைக்க, வயிற்றெரிச்சலின் காரணமாக எடப்பாடி எவ்வளவு வாய்க்கொழுப்பு இருந்தால். திமிர் இருந்தால் "கொரோனாவிலே தளபதி போய் சேர்ந்திருப்பார்" என்று சொல்லுவார்?

**உயிருக்குப் பயந்தவர் அல்ல எங்கள் தலைவர்!**

எங்கள் தலைவரைப் பற்றி அவருக்குத் தெரியாது. கழகத் தலைவராக இன்றைக்கு இருக்கிற முதலமைச்சர், தன் உயிரைத் துச்சமென மதித்து ஓடும் ரயிலின் முன் தண்டவாளத்தில் தலை வைத்துப் படுத்த கலைஞருடைய மகன். அவர் உயிருக்கு பயந் தவர் அல்ல. அன்றைக்கு கொரோனா மருத்துவமனையில் போய் பார்த்துவிட்டு வந்த நேரத்தில் அவருடைய குடும்பத்தினரே, அவருடைய துணைவியாரே கதறி அழுதிருக்கிறார்கள்.

அப்படிப்பட்ட தலைவரைப் பற்றி பழனிசாமி இந்த அளவுக்குக் கேவலமாகப் பேசுகிறார் என்றால் இது ஒன்றும் புதிதல்ல. காரணம் அவருக்குக் கொலை, கொள்ளை இதெல்லாம் கைவந்தகலை.

ஏற்கனவே 1979லே மூன்று பேரைக் கொலை செய்த வழக்கில் கொலைக் குற்றவாளியாக இருந்து, அந்தவழக்கில் அவர் எப்படி வெளியே வந்தார் என்பது எல்லாம் எல்லோருக்கும் தெரியும். அந்தப் பகுதியில் இருக்கிற மக்களுக்கும் தெரியும்.

அன்றைக்கு அ.தி.மு.க. ஆட்சியில் இல்லாமல் இருந்தால், இன்றைக்கு பழனிசாமி ஆயுள் கைதியாகத்தான் இருந்திருப்பார். அப்படிப்பட்ட பழனிசாமிக்கு ஒரு பழமொழி சொல்லுவார்கள், "நாயைக் குளிப்பாட்டி நடுவீட்டில் வைத்தாலும் அதனுடைய புத்தி போகாது" என்று. அதுபோல இவருடைய அந்த கொலைவெறி. அந்த உயிரைப் போக்குகிற மனப்பான்மை இன்னும் போகவில்லை என்பதை நேற்றைய தினம் அவருடைய பேச்சின் மூலமாக வெளிப்படுத்தி இருக்கிறார்.

தமிழ்நாட்டில் இருக்கிற கழகத் தொண்டர்கள் கொதித்துப் போயிருக்கிறார்கள். தமிழ்நாட்டு மக்களும் கொதித்துப் போயிருக்கிறார்கள்.

கழகத்தலைவர் அவர்கள் எல்லோரையும் சமாதானப்படுத்தி இருக்கிறார்.

இவருடைய பழைய கதைகளைஎல்லாம் நாங்கள் பேச ஆரம்பித்தால் அவ்வளவு தான்.

இப்பொழுதுதான் ஒவ்வொரு தீர்ப்பாக வந்து கொண்டிருக்கிறது. பழனிசாமியால் சாத்தான்குளத்தில் மூடி மறைக்கப்பட்ட அந்த கொலை வழக்கில், கழகத் தலைவர் தலையிட்டுப் போராடி சிபிஐ விசாரணை கொண்டு வந்ததால், அத்தனை பேருக்கும் மரணதண்டனை என்ற தீர்ப்பு வந்திருக்கிறது.

பழனிசாமி ஆட்சியில் அவர் மறைத்த அந்த வழக்குக்கு இன்று மரண தண்டனை கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அவர் புரிந்துகொள்ள வேண்டும்.

சாலையில் சுற்றிக்கொண்டிருந்த உங்களை அடையாளம் காட்டி உயர்த்தியவர் ஜெயலலிதா. ஆனால், அவர் வாழ்ந்த கோடநாடு பங்களாவிலேயே எடப்பாடி பழனி சாமியின் ஆட்சிக்காலத்தில் பல கொலைகள் நடந்தன. கோடிக்கணக்கான சொத்துக்களும், பணமும் நகைகளும் கொள்ளையடிக்கப்பட்டன.

அந்த நான்கு கொலைகளைப் பற்றி விசாரணை நடந்து கொண்டிருக்கிறது. எப்படிசாத்தான்குளம் வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட அத்தனை பேருக்கும் தூக்குத் தண்டனை கிடைத்ததோ, அதே போல் கோடநாடு வழக்கு முடிந்தவுடன் சம்பந்தப்பட்ட அத்தனை பேருக்கும் இதேபோல தீர்ப்பு வரும் தண்டனை கிடைக்கும்.

**மலிவான அரசியல் செய்யும் பழனிசாமி!**

தற்போதைய ஆட்சியின் சாதனைகளில் அவரால் எந்தக் குறையும் சொல்ல முடியவில்லை. ஒவ்வொரு திட்டமும் மக்களைச் சென்றடைந்து மக்கள் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். தி.மு.க.வின் தேர்தல் வாக்குறுதிகளுக்கு மக்களிடம் மிகுந்த வரவேற்பு உள்ளது. இதனைத் தாங்கிக் கொள்ள முடியாமலும், உளவுத் துறை தகவல்களின்படி திமுக 200 க்கும் மேற்பட்ட இடங்களில் வெற்றி பெறப் போகிறது என்பதை அறிந்தும் அவர் இத்தகைய மலிவான அரசியலில் ஈடுபட்டு வருகிறார்.

பாஜகவினரே அவரைப் பாராமுகமாக நடத்துவதற்குக் காரணமும் இது தான். அ.தி.மு.க.வினர் திமுக பக்கம் வரத் தொடங்கியதைப் பார்த்த வயிற்றெரிச்சலின் உச்சமாகவே, முதலமைச்சர் அவர்களையும் துணை முதலமைச்சர் அவர்களையும் குறித்து பழனிசாமி கீழ்த்தரமாகப் பேசி வருகிறார்.

**பழனிசாமிக்கு வரலாறு தெரியவில்லை!**

பழனிசாமிக்கு வரலாறு தெரியவில்லை. 1959இல் மாநகராட்சியை திமுக யைப்பற்றியபோது, அண்ணாவுக்குச் சிலை வைக்க விரும்பிய நேரத்தில், "பச்சைத் தமிழர் காமராஜருக்கே முதலில் சிலை வைக்க வேண்டும்" என்று அண்ணா கூறினார். அதன்படி, உயிரோடு இருந்த காமராஜருக்கு அண்ணா சாலையில் சும்பீரமான சிலையை அமைத்தது திமுகதான்.

காமராஜர் குடியாத்தம் தேர்தலில் போட்டியிட்ட போது அவரை ஆதரித்ததும் திமுகவே. டெல்லியில் காமராஜர் வீட்டை ஆர்எஸ்எஸ் தீவிரவாதிகள் கொளுத்திய போது அவரைப் பாதுகாத்தது கோதண்டபாணி என்ற தி.மு.க. தொண்டரும் அசோகா ஓட்டலில் பணி புரிந்த ஊழியரும்தான்.

காமராஜர் மறைந்தபோது அவருக்குச் செய்ய வேண்டிய அத்தனை மரியாதைகளையும் செய்தவர்கலைஞர். எமர்ஜென்சி காலத்தில் காமராஜரைக் கைது செய்ய மறுத்த காரணத்தினாலேயே திமுக ஆட்சி கலைக்கப்பட்டது.

காமராஜர் மறைந்தபோது எங்கே அடக்கம் செய்வது என்ற குழப்பம் இருந்த போது, அவர் வாழ்நாள் முழுவதும் காந்தியவாதியாக வாழ்ந்ததால் காந்தி மண்டபம் அருகிலேயே அடக்கம் செய்ய வேண்டும் என்று முடிவெடுத்தவர் கலைஞர்.

கொட்டும் மழையில் இரவோடு இரவாக அந்த இடத்தை நிலத்தைச் சீர்படுத்தி அவருக்கு இறுதி மரியாதை செலுத்தப்பட்டது. "காமராஜருக்குக் கொள்ளி வைக்க மகன் இல்லை என்ற குறையை கருணாநிதி தீர்த்து வைத்தார்" என்று அன்றைய காங்கிரஸ் தலைவர்களே மனதாரப் பாராட்டினர்.

**ஜானகி அம்மையார் குறித்துப் பேச தகுதியில்லை!**

ஜானகி அம்மாள் குறித்துப் பேச பழனிசாமிக்குத் தகுதியே கிடையாது. எம்.ஜி.ஆர். ஜானகி திருமணத்தை நடத்தி வைத்ததே கலைஞர் தான். 1989இல் கலைஞர் முதலமைச்சரானபோது அவரை முதலில் வாழ்த்தியவர் ஜானகி அம்மாள். இன்று பழனிசாமி அமர்ந்திருக்கும் அ.தி.மு.க. அலுவலகக் கட்டடமே ஜானகி அம்மாள் தானமாக வழங்கிய இடம்தான். ஜானகி அம்மாள் மீது இவ்வளவு பாசம் காட்டும் பழனிசாமி, முதலமைச்சராக இருந்த நான்கு ஆண்டுகளில் அவருக்கு ஒரு சிலையாவது அங்கோ அல்லது ராமாபுரம் தோட்டத்திலோ வைத்துள்ளாரா? இன்று ராமாபுரம் தோட்டம் சுடுகாடு போலக் கிடக்கிறது. ஜானகி அம்மாளின் பிறந்தநாளுக்கோ அல்லது நினைவுநாளுக்கோ ஒரு மலர் வளையமாவது பழனிசாமி வைத்ததுண்டா?

தேர்தல் நேரத்தில் இத்தகைய தில்லுமுல்லான, திருட்டுத்தனமான பேச்சுக்களைப் பேசுவதைப் பழனிசாமி வாடிக்கையாகக் கொண்டுள்ளார். அவர் இவ்வளவு கீழ்த்தரமாகப் பேசுவதால் எங்களுக்கு வாக்குகள் கூடுமே தவிரக் குறையாது. உண்மையான காங்கிரசார் அனைவரும் எங்கள் பக் கமே இருக்கிறார்கள்.

இவ்வாறு கழக அமைப்புச் செயலாளர் ஆலந்தூர் பாரதி கூறினார்.

---



மதுரை முனிச்சாலையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ அவர்கள் மதுரை தெற்கு சட்டமன்ற தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி ம.தி.மு.க. வேட்பாளர் மு.பூமிநாதனை ஆதரித்து உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். உடன் தொகுதி பொறுப்பாளர் வ.வேலுசாமி, மதிமுக மாவட்ட செயலாளர்கள் முனியசாமி, மார்நாடு உள்ளிட்ட கழக நிர்வாகிகள், கழகத்தினர், கூட்டணி கட்சி நிர்வாகிகள், ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் என ஏராளமானோர் பங்கேற்றனர்.



மதுரை கிழக்கு தொகுதி கழக வேட்பாளர், வடக்கு மாவட்டச் செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தொகுதிக்குட்பட்ட கண்ணனேந்தல் பகுதியில் வீதி வீதியாகச் சென்று பொது மக்களைச் சந்தித்து உதய சூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். உடன் மாவட்ட பொருளாளர் சோமசுந்தர பாண்டியன், பகுதி செயலாளர்கள் கவுரி சங்கர், சசிகுமார், மாவட்ட அணி அமைப்பாளர்கள் மீரா ஜான், எம். இளங்கோ, ஆதிசங்கர், இளைஞர் அணி துணை அமைப்பாளர் மருது ராஜா, வட்டச் செயலாளர்கள் மணிராஜ், செங்கிஸ்கான், மாமன்ற உறுப்பினர் ராதிகா உள்ளிட்ட கழக நிர்வாகிகள், கழகத்தினர், கூட்டணி கட்சி நிர்வாகிகள், பொதுமக்கள் உள்ளிட்ட என ஏராளமானோர் பங்கேற்றனர்.



மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சி தூத்துக்குடி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் தெற்கு மாவட்டச் செயலாளர் , அமைச்சர் அனிதா ஆர்.ராதா கிருஷ்ணன் வெற்றி சின்னமாம் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்களிக்குமாறு பிரச்சாரம் மேற்கொண்டார். மக்கள் அமோகமாக வரவேற்றனர். நிகழ்வில் மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ். உமரி சங்கர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பில்லா ஜெகன், ஒன்றிய செயலாளர் ஏ.பி..ரமேஷ், நகர செயலாளர் வாள் சுடலை, விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் ஜனகர் மற்றும் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.